# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் 02 பரீட்சை - 2026 யூலை

## (2801) நிதி மற்றும் கிரயக் கணக்கீடு

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினாவில் 10 உப-வினாக்கள் இருந்தன. இதில் 5 வினாக்கள் 25 புள்ளிகளுக்கான பல்தேர்வு (MCQ) வினாக்களாகும். இங்கு 2025/30 பாடத்திட்டத்தின் கீழ் நிதி மற்றும் கிரயக் கணக்கீட்டை உள்ளடக்கிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகமான பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

விடைத்தாள் மதிப்பீட்டுச் செயன்முறையின்போது பின்வரும் பொதுவான பலவீனங்களும் தவறுகளும் அவதானிக்கப்பட்டன:

**1.1** இவ்வினா நிதிக் கூற்றுகளின் மூலக்கூறுகளை இனங்காண்பதற்கான அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகளின் விடைகள் சரியாக அமைந்திருந்தன. பரீட்சார்த்திகள் நிதி நிலையின் மூலக்கூறுகளைத் தெளிவாக இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் இதனைச் சரியாக இனங்காண முடியவில்லை.

**1.2** இவ்வினா பல்வேறு கிரயவியல் முறைகளுக்கு மத்தியில் “குறிப்பான கட்டளைக் கிரயவியல் முறை” பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. நியாயமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**1.3** இவ்வினா கிரயக் கணக்குகள் மற்றும் நிதிக் கணக்குகளின் இலாபங்களுக்கு இடையேயான கணக்கிணக்கம் பற்றிப் பரீட்சித்திருந்தது. நியாயமானளவு பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சிலர் தேவையான சீராக்கங்கள் பற்றிய போதுமான அறிவைக் கொண்டிருக்காததால், சரியான விடையை அளித்திருக்கவில்லை.

**1.4** இவ்வினா மோட்டார் வாகனமொன்றின் (நிலையான சொத்து) விற்பனை மூலமான இலாப, நட்டத்தைக் கணிப்பிடுவது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகளால் எச்சப் பெறுமதி, பயன்தரும் ஆயுட்காலம் மற்றும் சொத்தின் பயன்தரும் ஆயுட்காலம் என்பன தேய்மானத்தைக் கணிப்பிடுவதற்கு முன் சரியாக இனங்காணப்படவில்லை என்பதால் மோட்டார் வாகனத்தின் விற்பனை மூலமான இலாபத்தைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை.

**1.5** இவ்வினா உற்பத்தி மேந்தலைகளின் உறிஞ்சல் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சிலர் சரியான பெறுமானத்தைக் கணிப்பிட்டிருந்தனராயினும் அது குறை உறிஞ்சலா அல்லது மிகை உறிஞ்சலா என்பதை இனங்காணத் தவறியிருந்தனர்.

**1.6** இவ்வினா 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் ஏற்பாடுகளை நேரடியாகப் பரீட்சித்தது. பல பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்த அதே வேளை ஏனையவர்கள் அவர்களின் சிந்தனைக்கு வந்ததையெல்லாம் எழுதியிருந்தனர்.

**1.7** இவ்வினா பொருள் கட்டுப்பாட்டின் நோக்கங்களை நேரடியாகக் கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொருள் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் பற்றிப் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

**1.8** இவ்வினா நிதிக் கணக்கீட்டிற்கும் கிரயக் கணக்கீட்டிற்கும் இடையேயான வேறுபாட்டை நேரடியாகக் கேட்டிருந்தது. இது அடிக்கடி வினாத்தாள்களில் கேட்கப்படுகின்ற ஒரு நேரடி வினாவாகும். சில பரீட்சார்த்திகள் முழுமையான விடையை வழங்கவில்லை.

**1.9** இவ்வினா "X" மற்றும் "Y" இன் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிடுவதைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விகிதத்தை வெற்றிகரமாக வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகளிடம் கணிதவியல் தொடர்பில் போதிய திறனோ, அறிவோ காணப்படாததால் அர்ப்பணிப்பு விகிதத்தைக் கணிப்பிட அவர்களால் முடியவில்லை.

**1.10** இவ்வினா முதல் வருவதை முதலில் ளியேற்றுகின்ற (FIFO) முறையைப் பயன்படுத்தி, இருப்பு மதிப்பீடு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ரூ.17,320/- எனச் சரியாக விடையளித்திருந்தனர். ஆனால், பாடப் பரப்பிலுள்ள கோட்பாட்டு ரீதியான அறிவு குறைவாக இருந்ததால் சில பரீட்சார்த்திகளால் சரியான விடையைக் கண்டறிய முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் முறையின் அடிப்படைப் புரிதலைக் காட்டியிருந்தனர். ஆனால் ஆரம்பகால கொள்வனவுகளில் எஞ்சியிருக்கின்ற தரங்களை இனங்காணும்போது வழுக்கள் ஏற்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

**வினா இல. 02**

இவ்வினாவானது பூரணமற்ற பதிவுகளைப் பயன்படுத்தி, ஒரு தனியுரிமை வியாபாரத்தின் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதன் மூலம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டத்தையும் உரிமையாளரின் உரிமையாண்மையையும் கணிப்பிடுகின்ற ஆற்றலைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்து, திருப்திகரமான மட்டத்தில் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இது ஒற்றைப் பதிவுக் கணக்கீட்டின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் ஒரு நியாயமானளவு புரிதலை வெளிக்காட்டுகிறது.

மேலும், சில பரீட்சார்த்திகளின் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) சில பரட்சார்த்திகள் அட்டுறுவான செலவினங்களைச் சரியாகக் கணக்கிற்கொள்ளத் தவறியிருந்தனர். அவர்கள் ஆண்டிற்கான உண்மையான மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கு நீர் மற்றும் மின்சாரத்திற்காகச் செலுத்தப்பட்ட தொகைக்கு சரியான சீராக்கத்தைச் செய்யத் தவறியிருந்தனர். இதன் விளைவாக ஆண்டின் இறுதியிலான இறுதி இலாபம் மற்றும் மூலதன மீதி சரியாக அமையவில்லை. இதற்கான புள்ளிகளை அவர்கள் இழந்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வியாபாரக் கணக்கிலுள்ள ஆரம்ப மற்றும் இறுதி இருப்புகளைத் தவறாகப் பதிவு செய்திருந்தனர். இந்த வழுக்கள் மொத்த இலாபக் கணிப்பீட்டைப் பாதிப்பதன் காரணமாக பிழையான இறுதி இலாபப் பெறுமானங்கள் பெறப்பட்டு, புள்ளிகள் இழக்கப்பட்டன.

(3) வினாவில் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பில் தரப்பட்ட தகவல்கள் சீராக்கங்களைத் தேவைப்படுத்தாதபோதும் சில பரீட்சார்த்திகள் அவற்றுக்கு, தேவையற்ற சீராக்கங்களை மேற்கொண்டிருந்தனர். இது, எத்தகைய சீராக்கங்கள் குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுடன் தொடர்புடையவை என்பதை கண்டறிய போதுமான அறிவு சில பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

(4) சில பரீட்சார்த்திகள் உரிமையாளரின் எடுப்பனவுகளைப் பிழையாக வருமானக் கூற்றில் பதிவு செய்திருந்தனர். பரீட்சார்த்திகள், இலாபத்தைப் பாதிக்கும் உருப்படிகள் மற்றும் உரிமையாளரின் மூலதனத்துடன் தொடர்புடைய உருப்படிகள் ஆகியவற்றுக்கிடையேயான தெளிவான வேறுபாட்டைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(5) குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் ஆண்டிறுதி மூலதன மீதியைச் சரியாகக் கணிப்பிடுவதில் சிரமங்களை அனுபவித்திருந்தனர். இறுதி மூலதனத்தைத் துணிவதில் ஏற்பட்ட வழுக்கள் இறுதி விடையைப் பாதித்திருந்தன. இதனால் புள்ளிகள் இழக்கப்பட்டன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இவ்வினாவானது பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகளை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தது. மேலும், இவ்வினா வணிகத்திலிருந்து ஒரு பங்காளரின் ஓய்வின்போதான சீராக்கங்கள் குறித்த பரீட்சார்த்திகளின் அறிவையும் பரீட்சித்திருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் பின்வரும் காரணங்களால் நன்றாக விடையளித்திருக்கவில்லை:

(1) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பங்காளர்களின் சம்பளங்கள் மற்றும் மூலதனம் மீதான வட்டியைக் கழிப்பதற்கு/ ஒதுக்குவதற்கு முன்னர் பங்குடமை இலாபத்தைப் பகிர்ந்திருந்தனர். இது, பங்காளர்களிடையே பகிர்வதற்காகக் கிடைக்கக்கூடிய இலாபத்தைத் தீர்மானிப்பதற்கான சரியான வரிசை பற்றி போதிய அறிவு காணப்படாததைக் குறிக்கிறது.

(2) சில பரீட்சார்த்திகள் பங்காளர்களின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகளில் வரவு மற்றும் செலவுப் பதிவுகளைச் சரியாகப் பதிவதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்தப் பலவீனம் குறிப்பாக நன்மதிப்புச் சீராக்கங்களைப் பதிவதில் காணப்பட்டது. இதன் விளைவாக புள்ளிகள் இழக்கப்பட்டிருந்தன.

(3) சில பரீட்சார்த்திகள் பங்குடமைச் சீராக்கங்களுக்கு இரட்டைப் பதிவுக் கோட்பாட்டைப் பிரயோகிப்பதில் பலவீனங்களை வெளிக்காட்டியிருந்தனர். பரீட்சார்த்திகள் மூலதன, நடைமுறைக் கணக்குகள் மற்றும் நன்மதிப்பு சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைகளின் வரவு மற்றும் செலவு விளைவுகள் குறித்த தங்கள் புரிதலை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

(4) சில பரீட்சார்த்திகள் பெரியளவான பணத்தொகைகளை, குறிப்பாக மில்லியன்களில் குறிப்பிடப்பட்ட தொகைகளைப் பதிவு செய்யும்போது எண்கணிதப் பிழைகள் விட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பூச்சியங்களைப் புறந்தள்ளி அல்லது சேர்த்ததன் மூலம் தவறான எண் பெறுமானங்களைப் பதிவு செய்திருந்தனர். இது பின்னர் அவர்களுடைய கணிப்பீடுகள் மற்றும் இறுதி விடைகளைப் பாதித்திருந்தது.

(5) பரீட்சார்த்திகள் பெறுமானங்களின் துல்லியத்தன்மையில், குறிப்பாக பூச்சியங்களின் எண்ணிக்கையில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் அதன் பின்னரான கணிப்பீடுகளைத் தொடங்குவதற்கு முன்னர் அனைத்து பணத் தொகைகளையும் சோதிக்க வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இங்கு, "இலாப நோக்கற்ற நிறுவனம்" ஒன்றின் அங்கத்துவச் சந்தாக் கணக்கு மற்றும் வருமான, செலவினக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவையும் புரிதலையும் பரீட்சகர் பரீட்சித்திருந்தார். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன், கீழ் குறிப்பிடப்படும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு:

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளத் தவறியிருந்தனர். இங்கு, இலாப நோக்கற்ற கணக்கீடு பற்றிய போதிய அறிவின்மை அவதானிக்கப்பட்டது.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் அங்கத்துவச் சந்தாக் கணக்கில் முன்கொணரப்பட்ட மற்றும் முன்கொண்டு செல்லப்பட்ட மீதிகளைப் பதிவு செய்யத் தவறியிருந்தனர்.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் ஒன்றுகூடல் மற்றும் கழக நடவடிக்கைகளை வேறாக்குவதில் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் வருமான, செலவினக் கணக்கிற்கான அங்கத்துவச் சந்தாக் கட்டணங்கள் மற்றும் ஒன்றுகூடல் மூலமான இலாபம் போன்ற தொடர்புடைய மீதிகளை மாற்றுவதற்குத் தவறியிருந்தனர்.

(5) அதிகமான பரீட்சார்த்திகள் சரியான புரிதலின்றி பரிவர்த்தனைகளைக் குறிப்பிட முயற்சித்திருந்தனர். எவ்வாறாயினும், அவர்களுக்கு பரிவர்த்தனைகள் தொடர்பான அடிப்படைப் புரிதல் காணப்பட வில்லை. உதாரணமாக, அதிகமான பரீட்சார்த்திகள் உணவகத்தின் மொத்த இலாபத்தைக் கணிப்பிடத் தவறியிருந்தனர். இங்கு, அவர்கள் பரிவர்த்தனைகளை வெவ்வேறு கணக்குகளில் பதிவு செய்திருந்தனர்.

(6) அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு, சம்பளங்களும் கூலிகளும், நீர், மின்சார மற்றும் வாடகைச் செலவினங்கள் போன்ற மீதிகளை கணிப்பிடத் தவறியிருந்தனர்.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள் ஆதனத் தேய்மானத்தைக் கணிப்பிடத் தவறியிருந்தனர் சிலர் சொத்தின் பெறுமதியை வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஓட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

இங்கு, பரீட்சகர் ஒரு நிறுவனத்தின் இருப்பு முகாமைத்துவம் (முகாமைத்துவக் கணக்கீடு) குறித்த அறிவு மற்றும் புரிதலைப் பரீட்சித்திருந்தார். அதிகமான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்த போதிலும் மிகச் சிலரே திருப்தியான மட்டத்தில் விடையளித்திருந்தனர்.

இந்த வினா பகுதிகள் **(A), (B)** ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**பகுதி (A):**

இந்தப் பகுதியில், விகிதங்களை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றி பரீட்சகர் பரீட்சித்துள்ளார்.

(1) அதிகமான பரீட்சார்த்திகள் போதிய அறிவின்மையால் விகிதங்களைக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

(2) சமன்பாடுகள் மற்றும் எண்கணித துல்லியம் குறித்த போதிய அறிவு காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

(3) சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசிக்காது விகிதங்களைக் கணித்திருந்தனர். உதாரணமாக, பரீட்சகர் குறைந்தபட்ச இருப்பு மீதி பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தார். ஆனால், பரீட்சார்த்திகள் அதிகபட்ச இருப்பு மீதியைத் தயாரித்திருந்தனர்.

**பகுதி (B):**

இந்தப் பகுதியில், பரீட்சகர் ஊழியச் செலவினங்களை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தார்.

(1) பரீட்சார்த்திகளிடம் கூலிகள் செலுத்தப்படுவதன் அடிப்படை மற்றும் மிகையூதிய மூலக்கூறுகள் பற்றிப் போதிய அறிவு காணப்படவில்லை.

(2) அதிகளவான பரீட்சார்த்திகள் உண்மையில் வேலைசெய்த மணித்தியாலங்கள் குறித்து புரிந்துகொள்ளத் தவறியிருந்தனர்.

(3) நியம மணித்தியாலங்களின் கணிப்பீடுகள் குறித்த போதுமான அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், **பகுதி (A)** ஆனது ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்டிருந்த அதே வேளை **பகுதி (B)** ஆனது பொருளின் மதிப்பிடப்பட்ட உற்பத்திக் கிரயத்தை கணிப்பிடுமாறு கேட்டிருந்தது.

பின்வரும் பொதுவான தவறுகள் அவதானிக்கப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் நேரில் மூலப்பொருள்களையும் நேரில் கூலியையும் அந்தந்தப் பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்வதைத் தவிர்த்திருந்தனர்.

(2) பல பரீட்சார்த்திகள் வாடகை, மின்சாரம், பணியாளர் சேமநலன் மற்றும் தேய்மானம் போன்ற மேந்தலைக் கிரயங்கள் பகிரப்படும்போது தவறான அடிப்படைகளைப் பயன்படுத்தியிருந்தனர்.

(3) எண்கணிதத் துல்லியமின்மை மற்றும் தசமதான வழுக்கள் காரணமாக, சேவைப் பிரிவின் மேந்தலைகளை உற்பத்திப் பிரிவுகளுக்கு ஒதுக்குவதில் துல்லியமின்மை காணப்பட்டது.

(4) சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட 55% : 45% இற்கிணங்க, சேவைப் பிரிவின் கிரயத்தை **உற்பத்திப் பிரிவுகள் P** மற்றும் **A** இற்கு மறுபகிர்வு செய்வதற்குப் பதிலாக, **உற்பத்திப் பிரிவு P** இன் மொத்தச் செலவில் 55% ஐயும் **உற்பத்திப் பிரிவு A** இன் மொத்தச் செலவில் 45% ஐயும் தவறாக மறுபகிர்வு செய்திருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் நேர் கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கையை பிரிவுசார் உற்பத்தி மேந்தலைக் கிரயத்திற்கு நேர் கூலிக் கிரயமாகத் தவறாகச் சேர்த்திருந்தனர்.

(6) ஒரு சில பரீட்சார்த்திகள் மேந்தலைக் கூற்றைச் சரியாகத் தயாரித்திருந்தனர், ஆனால் இறுதி விடையை முன்வைத்திருக்கவில்லை. எனவே அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

(7) ஒரு பொருளின் மதிப்பிடப்பட்ட உற்பத்திக் கிரயத்தின் கணிப்பீட்டைக் கோரியிருந்த **பகுதி (B)** ஐப் பூரணப்படுத்த சில பரீட்சார்த்திகள் முயற்சிக்கவில்லை. அதிகமான பரீட்சார்த்திகள் ஓர் அலகிற்கான உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது, தரப்பட்ட நேர் கூலி மணித்தியாலங்களை கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் பொருத்தமான நேர் கூலி மணித்தியாலங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மொத்த உற்பத்திக் கிரயத்தை மொத்த முதன்மைக் கிரயத்தால் பிரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 07**

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்ததுடன் இது **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்த அதே வேளை, **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். சில பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற முடிந்திருந்தது.

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) மிகச் சில பரீட்சார்த்திகளால் முற்றடக்க வருமானக் கூற்றுக்காகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவம் பின்பற்றப்படவில்லை.

(2) சில பரீட்சார்த்திகளால் வரிச் சீராக்கம் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் வியாபார வருமதிகளுக்கான சரியான விடுதொகை கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளை இணைத்திருக்கவில்லை, இதனால் செய்முறைக்காக ஒதுக்கப்பட்ட சில மேலதிக புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

(5) மிகச் சில பரீட்சார்த்திகளால் ஆண்டிற்கான தனிச்ச வட்டி முறையாக கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகளால் முன் செலுத்தப்பட்ட காப்புறுதி மற்றும் அட்டுறுவான கணக்காய்வுக் கட்டணம் என்பன சீராக்கம் செய்யப்படவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் 2026 ஏப்ரல் 02 இல் முழுமையாகச் சேதமடைந்த இருப்பைச் சீராக்கம் செய்ய மறந்திருந்தனர்.

(8) செலுத்தப்பட்ட விற்பனைத் தரகானது சில பரீட்சார்த்திகளால் ஒரு வருமானமாக எடுக்கப்பட்டிருந்தது.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகளிலிருந்து அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாட்டைக் கழித்திருக்கவில்லை.

(2) சில மாணவர்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பரிப்புகளுக்கிடையிலான வேறுபாடு பற்றி அறிந்திருக்கவில்லை.

(3) மிகச் சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றுக்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

(4) இயந்திரம், தளபாடமும் பொருத்துகளும் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கான திரண்ட தேய்மானத்தை சில பரீட்சார்த்திகள் சரியானவாறு கணக்கிற் கொள்ளவில்லை.

(5) சில பரீட்சார்த்திகளால் செலுத்த வேண்டிய வருமான வரி கணக்குகளில் காட்டப்படவில்லை.

(6) 2026 மார்ச் 31 இலான பரீட்சை மீதியில் காட்டப்பட்ட இருப்பின் பெறுமதியானது, 2026 ஏப்ரல் 02 இல் முற்றாகச் சேதமடைந்த இருப்புகளைக் கவனத்திற் கொள்ளாது நிதி நிலைக் கூற்றுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(7) சாதாரண பங்கு வழங்கலுக்கான சீராக்கங்கள் சில பரீட்சார்த்திகளால் செய்யப்படவில்லை, இதனால், உரிமையாண்மையின் சரியான தொகை கணக்குகளுக்கு எடுக்கப்படவில்லை. மேலும், பங்கு வழங்கலுக்காகப் பெறப்பட்ட மிகை நிதி, தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி சீராக்கம் செய்யப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

\- - - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்</u> :**

**(1)** பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை நன்கு படித்து அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**(2)** செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணத்தை விளங்கிக்கொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்க பயிற்சி செய்தல் வேண்டும்.

**(3)** கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைப் படித்து, குறைந்தது 2 – 3 பரீட்சை வினாத்தாள்களைப் பயிற்சி செய்து, வினாக்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

**(4)** பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன்னர், கடந்தகால வினாத்தாள்களை உரிய நேரத்தில் செய்து முடித்து பயிற்சி பெற வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

**(5)** பரீட்சார்த்திகள் பரீட்சையை தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

**(6)** பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், பரீட்சை வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

**(7)** வினாவை விளங்கிக் கொள்வதற்காகவும் வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது தெளிவான, சமநிலையான மனநிலையில் இருத்தல் வேண்டும்.

**(8)** பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே வினாக்களுக்கான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும். இதன் மூலம் வினாத்தாளில் தரப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் வினைத்திறனான முறையில் பரீட்சார்த்திகளால் விடையளிக்கக்கூடியதாக இருக்கும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், தேவைப்படுத்தப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமானவாறு இலக்கங்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும் ஒருமுறைக்கு இருமுறை பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.

- * * * -